புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
ISSN : 2456-821X
Peer-Reviewed
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/03 - March 2023

# *சங்க இலக்கியத்தில் தோழி*

***கட்டுரையாளர்***

***முனைவர் நா. குமாரி***

*உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,*

*அக்சிலியம் கல்லூரி (தன்னாட்சி), வேலூர்.*

## *முன்னுரை*

*சங்க அக இலக்கியங்கள் பெரும்பாலும் மனித குலத்தின் அக ஒழுக்கத்தினை வெளிப்படுத்தவே படைக்கப்பட்டது. சங்க இலக்கியத்தில் காணப்படும் மாந்தர்கள் தனித்துவம் வாய்ந்தவர்களாகக் காணப்படுகின்றனர்.ஒவ்வொரு பாத்திரங்களும் சிறப்பு ஆளுமைகளைப் பெற்றிருக்கின்றன.*

*சங்க அக இலக்கியங்களில் அதிகமாகக் குறிப்பிடப்படும் பாத்திரம் தோழி.தலைவிக்கு மிக நெருக்கமான உறவாக விளங்கக்கூடியவளும் அவளே. தலைவிக்காக எதையும் செய்யத் துணிந்தவளாக விளங்கும் தன்னலமற்றவள் தோழி என்பதை அக இலக்கியங்கள் தெளிவாக காட்டுகின்றன.*

## *தோழியின் இலக்கணம்*

*சங்க இலக்கியத்தில் வரும் துணைப் பாத்தரங்களில் தலைவன் தலைவிக்கு இணையான இடத்தைப் பெறுபவள் தோழி. இவள் தலைவியை விட அறிவில் மேம்பட்டவள். தலைவியை வளர்த்த செவிலியரின் மகளாகிய தானும், தலைவியும் வேறில்லை என்ற அளவிற்கு ஒன்றுபட்ட வாழ்வினை மேற்கொண்டுள்ளதை அறிய முடிகிறது. தொல்காப்பியர் தோழியைப் பற்றிக் கூறும் போது செவிலியின் மகள் தோழி ஆவாள் என்று கூறுகிறார். இதனை,*

*" தோழி தானே செவிலி மகளே"*

*( தொல். களவு: 1071)*

*என்னும் நூற்பாவால் அறியலாம்.*

***தோழியின் அறிவாற்றல்***

*தலைவியின் திருமணம் நடப்பதற்கு முன்பு அவள் மணம் ஆகாதவளே. ஆயினும் அவளே தலைவியின் திருமணத்தை முன்னின்று நடத்தி முடித்து வைக்கிறாள். ஏறத்தாழ தலைவியின் வயதுடையவளாயினும் அவள் முதிர்ந்த அறிவுடையவள். அவள் நடுவு நிலைமையும் உரனும், அருளும் உடையவளாக திகழ்கிறாள். தலைவனுக்குத் நிலையாமைத் தன்மையை உணர்த்தி பொருள் மட்டுமே வாழ்க்கையில்லை என்பதை உணர்த்துகிறாள். இதனை,*

*" வைகல் தோறும் இன்பமும் இளமையும்*
*எய்கனை நிழலிற் கழியுமிவ் வுலகத்துக்*
*காணீர் என்றலோ அரிதே யதுநனி*
*பேணீர் ஆகுவீர் ஐய"*

*(நற். 46 : 14)*

*என்ற பாடல் அடிகள் உணர்த்துகின்றன.*

***அறத்தொடு நிற்றல்***

*தலைவி தலைவனைக் காணாமல் உடல் வேறுபட்டு ஆற்றாது வருந்தி இருந்தாள். அது கண்ட செவிலித்தாய் தலைவியின் உடல் வேறுபாட்டிற்கான காரணத்தைத் தோழியிடம் வினவினாள். அதற்கு தோழி நாங்கள் ஒரு நாள் மழைச்சாரலில் வேங்கை பூக்களைப் பறிக்கச் சென்றோம். அப்பொழுது அங்கு "புலி, புலி" என்ற ஆரவாரம் கேட்டது. அப்பொழுது அங்கு கையில் வில்லை உடையவனாக தலைவன் ஒருவன் தோன்றி " அப்புலி போகிய வழியாதோ? என்று வினவி நின்றான். நாங்கள் நாணி ஒருவரையொருவர் மறைந்து நின்றோம். அவன் மெதுவாக வந்த வழியாக தேரைச் செலுத்திச் சென்றான். அவ்வாறு செல்லும்போது உன்னுடைய மகளையே பலமுறை நோக்கிச் சென்றான். அவளும் அவன் சென்று மறைந்த திசையை நோக்கி "இவன் ஓர் ஆடவனே" என்றாள். இதையன்றி வேறு ஏதும் காரணம் அறியேன். என்று தோழி செவிலிக்கு தலைவியின் காதலை குறிப்பின் மூலமாக உணர்த்தி அறத்தொடு நிற்கின்றாள்.*

*"சென்றோன்மன்ற, அக்கொன்று கிழவோனே,*
*பகல்மாய் அந்திப் படுகடர் அமையத்து,*
*அவன் மறை தேஎம் நோக்கி, மற்று இவன் மனே, தோழி! என்றனள் " (அகம், 48:225)*

*என்னும் வரிகள் இக்கருத்தினை மெய்ப்பிக்கின்றன.*

***தோழியின் அன்பு***

*தோழி தலைவி மீது மிகுந்த அன்பும், உறவும் கொண்டவளாக காணப்பட்டாள். தலைவி சிறிது கலக்கமடைந்தால் கூட அவளால் பொறுத்துக் கொள்ள முடியாது. உடனே தலைவனிடம் சென்று தலைவிக்காக பேசுவாள். தலைவன் தலைவியைக் காண*

பகற்பொழுதிலும் அடிக்கடி வந்து கொண்டிருப்பான். ஆனால் இப்போது அவன் வரவில்லை. இரவு பொழுதில் அன்றில்கள் கூடியிருப்பதைக் கண்டு தலைவி மிகவும் வருந்துவாள். தன் வருத்தத்தைப் பிறர் அறியாத வண்ணம் மறைப்பாள். எனவே நீ போய் தலைவனிடம் சொல் என்று பாணணை அனுப்புகிறாள். இதனை,

"மல்லல் மூதூர் மறையினைச் சென்று

சொல்லின் எவனோ பாண"! (அகம், 50: 910)

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன.

"உற்ற நேரத்தில் உதவும் நண்பனே உண்மையான நண்பன்" என்பது போல இங்கு தோழி தலைவி நிலை அறிந்து உடனுக்குடன் செயலாற்றுகிறாள். இதன் மூலம் தோழி தலைவி மீது கொண்டிருக்கும் அன்பு வெளிப்படுகிறது.

**வாயில் மறுத்தல்**

தலைவன் பரத்தையுடன் சென்று விட்டு மீண்டும் இல்லம் வர விரும்புவான். அதற்காக தூது அனுப்புவான் அப்போது தோழி வாயில் மறுப்பதாக சங்க இலக்கிய பாடல்கள் காட்டுகின்றன.

தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன் பரத்தையர் சேரியில் சென்று ஒரு குறுமகளை விரும்பினான். இதனால் ஊரில் பலரும் பலவாறு அலர் தூற்றினர். மீண்டும் தலைவன் தோழியிடம் வந்து வாயில் வேண்ட கூறினான். அதற்குத் தோழி மறுத்து பரத்தையர் வட்டத்தில் சென்று ஒரு நங்கையை விரும்பி மணம் செய்து கொண்டாய் என்று ஊரார் கூறுகிறார்கள். அந்த ஊரார் கூற்று இப்பொழுது அலராக இருந்துள்ளது என்று கூறி வாயில் மறுத்தாள். இதனை,

"அலர் ஆகின்றது, பலர் வாய்ப்பாட்டே"

( அகம்: 96 :18)

என்ற பாடல் அடி மூலம் அறியலாம்.

**தலைவியை ஆற்றுவிப்பவள் தோழி**

தலைவன் போரின் பொருட்டும், பொருள் தேடும் பொருட்டும், பரத்தையின் பொருட்டும் அடிக்கடி தலைவியைப் பிரிந்து செல்வான். அப்போது தலைவி தலைவனின் பிரிவை தாங்க முடியாமல் கவலைப்பட்டு உடல் மெலிந்து காணப்படுவாள். இந்நிலையில் தோழி அவளுக்கு ஆறுதல் மொழிகளைக் கூறி அவளை ஆற்றுவதாக சங்க இலக்கியத்தில் பல பாடல்கள் உள்ளன.

தலைவன் பரத்தையின் பால் தொடர்பு கொண்டிருந்தான். இதனால் தலைவி கவலைப்பட்டுக் கொண்டிருந்தாள். அப்போது தோழி புள்ளிகளை உடைய நண்டானது நீரிலுள்ள ஆம்பல் தண்டினை அறுக்கும். அதுபோல தலைவனும் பரத்தையிடம் கொண்டிருக்கும் தொடர்பை அறுத்து உன்னைப் பிரியாமல் எப்பொழுதும் உன்னுடனேயே இருப்பான் எனக் கூறி தலைவியை ஆற்றுவித்தாள் என்பதை,

"புள்ளிக் கள்வன் ஆம்பல் அறுக்கும்"

*(ஐங்: 21: 2)*

*என்னும் ஐங்குறுநூற்று வரிகள் விளக்குகின்றன.*

*மாலைப் பொழுதைக் கண்டு மயங்கிய தலைவியை நோக்கி தோழி! நீ வருந்தாதே, அற்புதமான தன்மையுடைய மாலைப் பொழுதில் மாவலிச் சக்கரவர்த்தி நீர் வார்த்துக் கொடுக்க , அதனை ஏற்று எல்லா உலகங்களையும் அறிந்து கொண்ட தலைவன் உனக்கு அருள் செய்யாதிருப்பானோ? அருள் செய்வான் எனக் கூறி ஆற்றினாள். இதனை,*

*" நீரேற்றளந்த நெடிய பிரானரு ளாவிடுமே"*

*(திரு.விரு.69:3)*

*என்ற பாடல் அடி விளக்குகிறது.*

**தலைவியின் நலம் பேணுவதில் தோழியின் பங்கு**

*காதலன் காதலியைப் பிரிந்து பொருள் தேடுவதற்காக சென்றான். அவன் இளவேனில் வரும் முன்னே வருவேன் எனக் கூறிச் சென்றான். ஆனால் நாட்கள் பல ஆகியும் அவன் வரவில்லை. அதனால் அவளின் துன்பம் பெருகியது. கண்ணீர் வடித்தாள். அப்போது தோழி வருகிறாள். தலைவன் சொல்லிச் சென்ற காலத்துக்கு முன்பே வருவான் தவறமாட்டான். வீணாக வருந்தாதே என்று கூறி தேற்றினாள். இதனை,*

*" பொய்யார் ஆகுதல் தெளிந்தனம்*

*மைஈர் ஓதி மட மொழியோயே"*

*(கலி. 150:22-23)*

*என்ற பாடல் அடிகளால் அறியலாம்.*

**தோழி தலைவனுக்கு கூறும் அறிவுரை**

*தலைவன் தவறு செய்யும் நேரங்களில் அந்த தவறை சுட்டிக்காட்டி தலைவனுக்கு அறிவுரை கூறி அவனை நல்வழிப்படுத்துபளாகவும் தோழி காணப்படுகிறாள்.*

*தலைவன் பரத்தையிடம் சென்று திரும்பி வந்ததை அறிந்த தோழி என் தலைவி இல்லத்திற்கு வேண்டுமானவற்றை விரும்புவாளே தவிர வேறொன்றையும் விரும்ப மாட்டாள். அவள் ஒழுக்கத்தை உடையவள். உனக்கும் உன் ஒழுக்கத்திற்கும் தீங்கு வருமென்று அஞ்சி யாணர் ஊரன் வாழ்க என்றும் பாணனும் வாழ்க என்றும் நாங்கள் விரும்பினோம் என்று கூறினாள் என்பதனை,*

*"யாணர் ஊரன் வாழ்க,*

*பாணனும் வாழ்க என வேட் டேமே",*

*என்னும் பாடல் அடிகளால் அறியலாம்.*

*பூக்களின் ஒளிமயமான ஊரணி பழையனியின் வேல் போன்றே உன் பழைய நல்ல சொற்களை நம்பி தெளிந்தவள் இவள் இவளது கொங்கைகள் தளர்ந்து சாய்ந்த காலத்திலும் இவளை கைவிடாது காப்பாயாக என்று தலைவனின் கையில் தலைவியை ஒப்படைத்து*

*"பழையன் வேல் வாய்த்தன்ன நின்*

*பிழையா நல் மொழி தேறிய இவட்கே "*

*(நற்: 10:89)*

*என்று தோழி கூறினாள்.*

***பகல், இரவுக்குறிகள்***

*தலைவனும் தலைவியும் தம்முள் ஒத்த அன்புடையவர்களாய் பெற்றோர், உற்றார், உறவினர் யாரும் அறியாமல் பகல் இரவு நேரங்களில் சந்தித்து மகிழ்வர்.*

*பகற்குறியில் தலைவியை சந்திக்க விட்டு தலைவனை எதிரே பார்த்து தோழி தலைவனிடம் கூறுகின்றாள்.*

*" கல்சேர்ந் தன்றே, பல்கதிர் ஞாயிறு*

*மதர் எழில் மழைக்கண் கழுழ இவளே*

*பெருநாண் அணிந்த சிறு மென் சாயல்*

*மாண்நலம் சிதையே ஏங்கி, ஆனாது*

*அழல் தொடங் கினளே - பெரும் "*

*(அகம்: 120 : 59 )*

*உன்னுடைய பிரிவால் தலைவி அழத் தொடங்கி விட்டாள். அன்றில் பறவை துணை பிரிந்தால் வாழாது இறக்கும். அதுபோல தலைவியும் உன்னை பிரிந்தால் உயிர் வாழ மாட்டாள் என்று தலைவியின் மனநிலையை எடுத்துக் கூறி தலைமையின் உயிரை காக்க வேண்டிய கடமை தலைவனுக்கும் உள்ளது என்பதை உணர்த்துகின்றாள்.*

*களவு வாழ்க்கையை நீட்டிக்க விரும்பிய தலைவன் தினந்தோறும் இரவில் தலைவியை சந்தித்து மீள்கின்றான். அவனைத் தோழி தனியாக சென்று அவன் வரக்கூடிய வழியில் இடையூறுகளை எடுத்துக் கூறி தலைவியை மணந்து கொள்ளுமாறு வலியுறுத்துகிறாள்.*

*"உறுபுலி யுருவேப்ப பூத்த வேங்கையைக்*

*கறுவுகொண் டதன் முதற் குந்திய மதயானை*

*நீடிரு விடரகஞ் சிலம்பக் கூய்த்தன்.*

*கோடுபுய்க் கல்லா துழக்கு நாட கேள்" (கலி. 38:69)*

*புலியனது வடிவையொப்பப் பூத்த வேங்கை மரத்தைப் புலியனக் கறுவுதல் கொண்டு அதன் அடியிலேயே குத்திய மதத்தையுடைய யானையை உடைய நாடனே. அவ்யானையைப் போன்று மயங்கிய நீடித்தற் கொடியதாகும். அதனை விடுத்து கற்பின் கண் இல்லற பயனோடு கூடிப் பேரின்பத்தைத் தரும்படி வரைவு கடாவுதல் வேண்டும் என எடுத்துரைப்பாள்.*

***முடிவுரை***

*"உலகில் எல்லா உயிர்களும் மேன்மை பெற ஆசைப்படுங்கள்" என்ற மனவியல் நிபுணர்களின் கருத்துக்கு ஏற்றபடி தோழி காணப்படுவதை இங்கு காண முடிகிறது. தோழி*

*தலைவி மீது காட்டும் அக்கறையிலிருந்து தோழியின் உண்மையான உறவு வெளிப்படுவதை அறிய முடிகிறது.*

**துணை நூல்கள்**

*1. சரளா இராசகோபாலன், சங்க. இலக்கியத்தில் தோழி*

*2. பக்தவச்சலபாரதி, சங்க இலக்கீயத்தில் குடும்பம்*

*3. கே.ஏ.குணசேகரன், சங்க இலக்கியச் சிந்தனைகள்*

*4. தொல்காப்பியர், தொல்காப்பியம், சாரதா பதிப்பகம்.2013*

*5. அகநானூறு கழக வெளியீடு. சென்னை.*

*6. நற்றிணை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.*

*7. கலித்தொகை, கழக வெளியீடு, சென்னை.*